1986 மே 2]

மதுக்கரை அசோசியேட்ட் சிமெண்ட் கம்பெனி தொழிலாளர்கள்.

628—(* வினா எண். 3086)—திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரையில் உள்ள அசோசியேட்ட் சிமெண்ட் கம்பெனியில் கில்லன் பிரிவில் ஐந்து கில்லன்கள் உள்ளதை மாற்றி ஒரே நவீன கில்லன் மட்டும் அமைக்கப் போவதால் பல தொழிலாளர்கள் வேலை இழக்கும் ஆபத்து வர உள்ளது அரசின் கவனத்திற்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில், இந்த நவீன இயந்திரம் புகுத்தப் படுவதால் தொழிலாளர்கள் வேலை இழக்காமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மதுரை ஜெய்ஹிந்துபுரம் அங்காடி.

629—(* வினா எண். 5709)—திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை "ஜெய்ஹிந்துபுரம்" காய்கறி மார்க்கெட்டுக்கு, மதுரை மாநகராட்சி மூலம் தனியாக இடம் ஒதுக்கிக் கட்டிடம் கட்டித் தரும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த "ஜெய்ஹிந்துபுரம்" மார்க்கெட்டிற்கு உட்பட்ட 'எம்.கே. புரம், ஜீவா நகர், டி.வி.எஸ். நகர்' போன்ற சுமார் 10,000 குடும்பங்கள் அடங்கிய பகுதிகளுக்குப் பயன் பெறுகின்ற மார்க்கெட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த

மார்க்கெட் தற்போது "ஜெய்ஹிந்துபுரம்" மெயின் வீதியில் இருக்கிறது. தற்போது சாலை ஓரங்களில் காய்கறிகளைப் பரப்பி வைத்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, அங்குள்ள மக்கள் பயன் பெறுகின்ற வகையில் ஒரு நவீன கட்டிடத்தை மாநகராட்சி மூலம் கட்டித் தந்து, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் பயன் பெறுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இல்லை என்று சொன்னேன். இதைப் பற்றி அரசு பரிசிலிக்கும்.

பட்டுக்கோட்டை நகராட்சி சேமிப்புக் கிடங்கு.

630—(வினா எண். 7699)*—**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் நகராட்சி சேமிப்பு கிடங்கு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(ஆ) பட்டுக்கோட்டை நகர், காசாங்குளம் தென் கரையில் ச. எண். 26-ல் சுமார் 78 சென்ட் நிலத்தில் சேமிப்பு கிடங்கு கட்டும் பணி மத்திய அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழக அரசின் நகர் ஊரமைப்பு வாரியத்தினால் பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்டத்திற்கான நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன் பணி துவக்கப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் நகராட்சி சேமிப்பு கிடங்கு கட்டுவதற்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நன்றி. இதற்காக